Australia New Zealand Exam Board

# இறுதியாண்டு மாதிரி வினாத்தாள்

## வருடம் 05

# இறுதியாண்டு மாதிரி வினாத்தாள் வருடம் 05

## பன்முகத்தேர்வுவினாக்கள்

### பகுதி 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சந்திரனின் மறுபெயர்<br>1. பாரதியார் 2. சூரியன் 3. மதி 4. கதிரவன் | 1 | 2 | 3 | 4 |
| 2 | பாலில் இருந்து எடுக்கப்படும் உணவு இது<br>1. தண்ணீர் 2. தயிர் 3. பழம் 4. படம் | 1 | 2 | 3 | 4 |
| 3 | சிலந்திக்கு கால்கள் எத்தனை ?<br>1. இரண்டு 2. நாலு 3.ஒன்று 4. எட்டு | 1 | 2 | 3 | 4 |
| 4 | தம்பி - தங்கை நடிகன் __________<br>1. தங்கை 2. நடிகை 3.மாமி 4. அக்கா | 1 | 2 | 3 | 4 |
| 5 | மரம் பன்மையில் எழுதினால்<br>1. மரங்கள் 2.மரம்கள் 3. மரகள் 4. மாகள் | 1 | 2 | 3 | 4 |
| 6 | கருமையானது என்றால்<br>1. சிவப்பு 2. பழுப்பு 3.கறுப்பு 4.வெள்ளை | 1 | 2 | 3 | 4 |
| 7 | மா மரத்தில் இருந்து எடுக்கப்படும் பழம் _____<br>1. இளநீர் 2. மாம்பழம் 3. வாழைப்பழம் 4. படம் | 1 | 2 | 3 | 4 |
| 8 | யானைக்கு வால்<br>1. இரண்டு 2. மூன்று 3.ஒன்று 4.இல்லை | 1 | 2 | 3 | 4 |
| 9 | நான் என் ______ கால்களால் நடக்கிறேன்.<br>1. 3 2.4 3.2 4.1 | 1 | 2 | 3 | 4 |
| 10 | அரசனின் எதிர்பால் சொல் ________<br>1. தங்கை 2.அப்பா 3.அரசி 4.மாமா | 1 | 2 | 3 | 4 |
| 11 | மல்லிகை மலர் ________ நிறம் உடையது.<br>1. பச்சை 2.சிவப்பு 3. வெள்ளை 4.கறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 12 | ------------------ கதைப் புத்தகம் படிக்கிறோம்.<br>1. நாங்கள் 2.நான் 3. நாம் 4.அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 13 | குதிரைக்கு கால்கள் ____________<br>1.இரண்டு 2. ஒன்று 3. நான்கு 4.மூன்று | 1 | 2 | 3 | 4 |
| 14 | அந்த பழம் கீழே ___________<br>1. விழுந்தன 2.விழுந்தது 3. ஓடியது 4.சென்றது | 1 | 2 | 3 | 4 |
| 15 | கப்பல் ------------------வேகமாக செல்லும்.<br>1. வானத்தில் 2. நீரில் 3. தரையில் 4. காற்றில் | 1 | 2 | 3 | 4 |
| 16 | தேவன் நேற்று போட்டியில் வெற்றி பெற்றான்.அவன் நாளையும் வெற்றி ________<br>1.பெற்றான் 2.பெறுவான் 3.பெறுவர்<br>4.பெறுவார்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17 | தமிழ் ஒரு _______ மொழி.<br>1.புதிய 2. நாகரீக 3. பழமையான 4.கலப்பட | 1 | 2 | 3 | 4 |
| 18 | பிறப்பு என்பதன் எதிர்சொல்<br>1.உதிப்பு 2.இறப்பு 3.மறைவு 4.தோன்று | 1 | 2 | 3 | 4 |
| 19 | எண்ணும் _________ கண் எனத் தகும்.<br>1. கல்வி 2. அழகு 3.எழுத்து ம் 4. ஏடும் | 1 | 2 | 3 | 4 |
| 20 | ஓடி _________ பாப்பா.<br>1.படி 2.விளையாடு 3.நட 4 .தூங்கு | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **21** | எனது அம்மம்மா என்றால் அவர்<br>1. அப்பாவின் அம்மா 2. அம்மாவின் தங்கை<br>3. அம்மாவின் அம்மா 4.அம்மாவின் அக்கா | 1 | 2 | 3 | 4 |
| **22** | என் வீட்டில் பல உறவினர்கள் வந்து __________<br>1.தங்கின 2.தங்கினார்கள் 3.தங்கின 4.தங்கினான் | 1 | 2 | 3 | 4 |
| **23** | வருடத்தின் இறுதியாக வரும் மாதம் எது?<br>1. தை 2.ஆவணி 3.மார்கழி 4. சித்திரை | 1 | 2 | 3 | 4 |
| **24** | சிறுவன் ஒத்தசொல் எது?<br>1. சிறுமி 2.பையன் 3.தலைவி 4.பாடகி | 1 | 2 | 3 | 4 |
| **25** | இருபத்தியைந்து என்பது<br>1.Hundred 2.Fifty 3.Twenty five 4.Twenty | 1 | 2 | 3 | 4 |

பகுதி 2

1} **பின்வரும் பந்தியை வாசித்து கேள்விகளுக்கு <u>வசனத்தில்</u> விடை எழுதுக.**

கந்தனிடம் ஒரு வாத்து இருந்தது. அது ஒவ்வொரு நாளும் ஒரு பொன் முட்டை இட்டது. இதனால் கந்தனுக்கு நல்ல மகிழ்ச்சி. இந்த வாத்தின் வயிற்றை வெட்டினால் எல்லா முட்டைகளையும் ஒரே நாளில் எடுக்கலாம். நான் அவற்றை விற்று ஒரே நாளில் பணக்காரனாக மாறலாம் என்று கந்தன் நினைத்தான். அவன் வாத்தைப் பிடித்து அதன் வயிற்றை வெட்டினான். வாத்து இறந்து விட்டது. அதன் வயிற்றினுள் ஒரு முட்டை மட்டுமே இருந்தது. கந்தனிடம் பொன் முட்டையும் இல்லை, பொன் முட்டையிட வாத்தும் இல்லை.

i) கந்தனிடம் என்ன இருந்தது?

-----------------------------------------------------------------------------------

ii) கந்தனின் வாத்து என்ன முட்டை இட்டது?

-----------------------------------------------------------------------------------

iii) கந்தன் ஏன் வாத்தின் வயிற்றை வெட்டினான்?

-----------------------------------------------------------------------------------

**1) பின்வரும் மாறிக் கிடக்கும் சொற்களை கருத்தமைய மாற்றி வசனமாக எழுதுக.**

i) ஒளிந்து - புதருக்குள் - முயல் - ஒடி – கொண்டது

---------------------------------------------------------------------------------------

ii) மொழி - தமிழ் - பழைய - இனிமையான - எங்கள் - மிகவும் –மொழி - ஆகும்

______________________________________________

iii) எளிமையாக - பாரதியாரின் - மிகவும் - பாடல்கள் – இருக்கின்றன.

______________________________________________

______________________________________________

**2) கோடிட்ட இடங்களை தரப்பட்ட சொற்களை வைத்து நிரப்புக.**

**இசை, மரத்தில், பாடல்களை , கருவிகள் , புல்லாங்குழல்**

தமிழ் இசைக்_______________ பல. அவற்றில் ஒன்று _____________.

புல்லாங்குழல் _____________மிகவும் இனிமையானது. புல்லாங்குழில் ஏழு

அல்லது ஆறு துளைகள் உள்ளன. இதில் பல ____________ இசைக்கலாம்.

இன்றும் மூங்கில் _________________ இருந்து புல்லாங்குழல் செய்கிறார்கள்.

**3) பின்வரும் செய்யுள்கள் இயற்றிய புலவர்கள் அல்லது பெரியார்கள் பெயர் தருக.**

i) ஊக்கமது கைவிடேல் ________________________________________

ii) அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

______________________________________________

iii) கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக. ____________________

**4) பின்வரும் சரியான சொற்களை வைத்து பழமொழிகளை நிறைவு செய்க.**

( ஆபத்தில் , காலை , ஐம்பதில் , பொன் , சுடுகாடு )

i) காக்கைக்கும் தன் குஞ்சு _____________ குஞ்சு.

ii) தொட்டில் பழக்கம் ________________________ மட்டும்.

**5) சேர்த்தெழுதுக.**

i) பணம்+தேடி _________________

ii) கிணறு+நீர் ___________________

iii) கூட்டு+ அரசு ________________

**பிரித்தெழுதுக.**

செங்கல் _______________

ஆட்பலம் _______________

வெந்நீர் _________________

**6) சொற்களில் எழுதுக.**

1000

700

90

**7). எதிர் சொற்களை எழுதுக.**

இறக்குமதி

வளர்பிறை

**8). கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| நேற்று | நாளை |
| --- | --- |
| 1. வரைந்தனர் | --------------------------------- |
| 2 மீட்டுவாள் | --------------------------------- |
| 3. ஊதினார் | ---------------------------------- |

**9). பின்வரும் ஒன்றைப் பற்றி 100 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.**

பாரதிதாசன் , நடுகல் , நடப்பின்சிறப்பு , கிளித்தட்டு

**10). கீழே கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து ஆங்கிலத்தல் எழுதுக.**

ஒரு ஊரில் ஒரு வெள்ளைப் புறா இருந்தது. அது ஒரு காகத்தை கண்டது. காகம் கறுப்பாக இருந்தது." நானும் கறுப்பாக இருந்தால் எவ்வளவு நல்லது' என்று புறா நினைத்தது. இதனால் அது கறுப்புச் சாம்பலில் புரண்டு புரண்டு பார்த்தது. சாம்பலை உடல் முழுவதும் பூசியது, ஆனால் கறுப்புப் புறாவாக மாற முடியவில்லை. புறாவிற்கு மிகவும் கவலையாக இருந்தது. இதைப் பார்த்த காகம் "நண்பா, உன் நிறம் வெள்ளை என் நிறம் கறுப்பு இரண்டும் அழகான நிறங்கள் தான் நாம் நிறத்தில் வேறானாலும் நல்ல நண்பர்களாக இருக்கலாம்" என்று ஆறுதல் கூறியது.

**1). இரட்டைச் சொற்கள்.- வசனம் அமைக்கவும்**

கட கட, பட பட, கீச் கீச், கிடு கிடு, கலீர் கலீர்

.